**வலிகாமம் மேற்கு பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் இன் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1 ஆம் பந்தியிலுள்ள (அ) அவதானிப்பு நீங்கலாக கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி திணைக்களம் வட மாகாணத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ரூபா 328,970 இயந்திரங்களும் பொறித் தொகுதிகளும் மூலதனமாக்கப் படாமையினால் நிதிக்கூற்றில் நிலையான சொத்து மற்றும் மூலதன அரசிறை உதவு தொகை என்பன குறைத்து வெளிப்படுத்தப் பட்டிருந்தது. | குறித்த பொறித் தொகுதியும் இயந்திரங்களும் தவறுதலாக கணக்குகளில் உள்வாங்கப்பட வில்லை. நடைமுறையாண்டில் இவை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி பதிவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த தவறுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 04 எண்ணிக்கையான வேலைத் திட்டங்கள் நிறைவேற்றப்படாத போதும் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு சில்லறைக்கடன் கொடுத்தோர் கணக்கில் உள்ளடக்கப்பட்டதனால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,476,120 செலவீனங்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்பு அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | வேலைதிட்டங்களிற்காக 2021.12.09 ஆம் திகதிய பத்திரிகை விளம்பரம் செய்யப்பட்டு 2021.12.31 ஆம் திகதி Letter of Acceptance வழங்கப்பட்டு சில்லறை கடனாளி கணக்கில் ஒதுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி கொடுப்பனவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த தவறுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |

## 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட உள்ளூராட்சிக் கடன் வட்டி | 1,263,700 | ஆரம்ப மீதிக்கான விபரம் | உள்ளூர் கடன் அபிவிருத்தி நிலையத்திடமிருந்து பெறப்பட்ட கடனுக்குரிய வட்டியாகும். இது தொடர்பான ஆவணங்கள், தகவல்கள் எவையும் தற்போது பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. | இவ் விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்க்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | உள்ளூர் அபிவிருத்திக் கடன் மீதி | 414,052 | 2013 ஆம் ஆண்டிலிருந்து மீதிக்கான விபரம் | உள்ளூர் கடன் அபிவிருத்தி நிலையத்திடமிருந்து பெறப்பட்ட கடனாகும். இது தொடர்பான ஆவணங்கள், தகவல்கள் எவையும் தற்போது பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. | குறித்த சட்ட ஏற்பாடுகளிற்கமைவாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | பிரதியீட்டு ஒதுக்கம் | 400,000 | பிரதியீட்டு ஒதுக்க விபரங்கள் | குறித்த பிரதியீட்டு ஒதுக்கமானது 2002 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியிலிருந்து கணக்குகளில் நிலுவையாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது இது தொடர்பான ஆவணங்கள் தகவல்கள் எவையும் கிடைக்கப்பெறவில்லை. | இவ் விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்க்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| - பிரிவு 158 (1) | கடந்த 03 வருடங்களாக ரூபா 17,546,173 பெறுமதியான ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு செயலாளரினால் பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்க வில்லை. | பற்றாணைச்சீட்டு படிவம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதுடன் யூன் 2022 ற்குள் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | குறித்த சட்ட ஏற்பாடுகளிற்கமைவாக தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 39,305,981 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 21,734,782 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| **வீதவரி** | | |
| 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளை சட்டத்தின் 134(i) இற்கமைவாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களிலுள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் என்பனவற்றின் மீது அறவிடப்பட வேண்டிய ரூபா 17,546,173 ஆதனவரி நிலுவையினை அறவிடுவதற்கு கடந்த 03 வருடங்களாக ஆக்கபூர்வமான | சபையின் நான்கு உப அலுவலகங்களினாலும் மாதாந்தம் நடமாடும் சேவை மேற்கொள்ளப்பட்டமையினால் ஆதனவரி நிலுவைத்தொகை கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளன. மேலும் சபையில் வருமானப்பரிசோதகர் ஒருவருக்கான வெற்றிடம் மற்றும் நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கு யாரும் முன்வராத நிலையிலும் ஏற்கனவே | வருமான சேகரிப்பு முகாமைத்துவத்தினை வினைத்திறனாக்குவதுடன் நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் ஆதனவரி நிலுவை தொடர்பாக வயதுப்பகுப்பாய்வினை நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் ஆதனவரி ஆரம்ப நிலுவையாக ரூபா 16,912,485 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள போதிலும் குறித்த பெறுமதி எந்த ஆண்டுகளுக்குரியது என கணக்காய்வின் போது வேறுபடுத்த முடியவில்லை. | நடுக்கட்டல் உத்தியோகத்தராக இருப்பவர்கள் குறித்த பதவியில் இருந்து விலகி வருகின்ற காரணத்தினாலும் ஆதனவரி அறவீட்டில் சற்று தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனை தவிர்ப்பதற்கு நீதிமன்றினூடாக யூலை 2022 இற்குள் நடவடிக்கை எடுக்கப்படும். | ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி என்பன தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிலையான வைப்பில் உள்ள நிதி ரூபா 89,607,611 இனை பயன்படுத்தி அபிவிருத்தித் திட்ட வேலைகளினை நடைமுறைப்படுத்தாது வங்கியில் வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் வைப்பிலிடப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் நிலையான வைப்பிலுள்ள நிதி ரூபா 89,607,611 இல் அபிவிருத்தி வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டது. | நிதியினை விரையமின்றி உத்தமமட்டத்தில் பயன்படுத்தி அபிவிருத்தி செயற்பாட்டினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்படும் 08 எண்ணிக்கையான கடைகள் குத்தகைக்கு வழங்கப்படாமையினால் மீளாய்வாண்டில் ரூபா 292,200 சபைக்கு வருமான இழப்பாக இருந்தது. | குறித்த கடைகள் 2022.03.02 ஆம் திகதிய உதயன், தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் கேள்வி கோரப்பட்டு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. | சபையினால் சொத்துக்களைப் பயன்படுத்தி வருமானம் உழைப்பது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |